# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2010 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் (திருத்தச்) சட்டம்

*(2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2010*, ஓகத்து மாதம் *20* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## *2010 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் (திருத்தச்) சட்டம்*

[*2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.-ஓ. 6/2006*

### *விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப்பெயர்.*

***1.** இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*431 ஆம் அத்தியாயத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (431 ஆம் அத்தியாயமான) விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியக் கட்டளைச்சட்டத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-*

*"அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.*

***7.** (1) அமைச்சர் விதித்துரைக்கப்படவேண்டு மென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது இச்சட்டத்தின் கீழ் எது தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அது தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.*

*(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள் ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது அதில் குறித்துரைக்கப் பட்டவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

2-PL 005042 - 1,140 (2010/07)

(3) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் வசதியானவரை விரைவாக அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அதன் கீழ் முன்னர்செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அங்கீகார மறுப்புத் திகதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் திகதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஏற்புடையதாதல் ஆகாது" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :

"ஏற்புடையதாதலாகாது :

ஆயின், எவ்வாறாயினும் இயைபான தேதியன்று அல்லது அதன்பின்னர் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஓர் உதவுதொகை செலுத்துநராக வந்துள்ளவரும் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவிதமாக ஓய்வு பெறுகைக்கு அல்லது அகற்றுகைக்கு அல்லது ஓய்வூதியமுமின்றி பகிரங்க சேவையினின்றும் நீங்குதற்கு முன்னர் பத்தாண்டுகாலச் சேவையைப் பூர்த்திசெய்துள்ளவருமான எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவின் கீழான நன்மைகளுக்குத் தகவுடையவராதல் வேண்டும்.";

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 27அ மற்றும் 27ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**4.** பின்வரும் புதிய பிரிவுகள் முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 27அ மற்றும் 27ஆ என்னும் பிரிவுகளாக பயனுறுதலும் வேண்டும் –

*"அவசரகால ஒழுங்குவிதிகள் முதலியவற்றின் கீழ் தவறொன்றாக*

27அ. (1) நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துநராகவுள்ள எவரேனும் பகிரங்க அலுவலர், அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் அவசர கால ஒழுங்குவிதியின்கீழ் தவறொன்றாக அமை

*அமைகின்ற செயல்களின் காரணமாக இறக்கின்ற பகிரங்க அலுவலர்கள் முதலியவர் களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு.*

*கின்ற செயலொன்றின் காரணமாக அல்லது ஏதேனும் இயற்கை அனர்த்தம் காரணமாக, அவரது ஓய்வுபெறும் வயதை அடையுமுன்னர் இறக்கு மிடத்து, அத்தகைய அலுவலரின் விதவையும் பிள்ளைகளும், இக்கட்டளைச்சட்டத்தின் வேறெவை யேனும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும்,–*

*(அ) அத்தகைய அலுவலர் இறந்த நேரத்தில் அவர் பெற்றுக்கொண்டிருந்த சம்பளத்தின் அடிப்படையில், அவர் உயிரோடிருந்திருப் பின், எந்தத் தேதியன்று அவரது ஓய்வு பெறும் வயதை அவர் அடைந்திருப்பாரோ அந்தத் தேதிவரை, இக்கட்டளைச் சட்டத் தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணக்கிடப் பட்ட ஓய்வூதியமொன்றை அத்தகைய இறப்புத் தேதியிலிருந்து பெறுவதற்கும் ; அத்துடன்*

*(ஆ) அவர் ஓய்வுபெறும் வயதை அடைந்திருக் கக்கூடிய தேதியிலிருந்தும் அதன் பின்னரும், அவர் உயிரோடிருந்திருப்பின் அவரது ஓய்வுபெறும் வயதை அவர் அடையும் வரை அவர் எந்தச் சம்பள உயர்வுகளைப் பெறுவதற்கு உரித்துடைய வராகவிருந்திருப்பாரோ அந்தச் சம்பள உயர்வுகள் எல்லாவற்றுடனும் மீளாய்வு செய்யப்பட்ட சம்பளத்தின் அடிப்படையில், இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக் கிணங்கக் கணக்கிடப்பட்ட ஓய்வூதியமொன் றைப் பெறுவதற்கும்,*

*உரித்துடையவராதல் வேண்டும்.*

*(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்கென ஓய்வூதியத்தைக் கணக்கிடுகையில், ஓய்வுபெறும் வயதானது, சம்பந்தப்பட்ட அலுவலரின் இறப்புக் கான சூழ்நிலைகள், அவரின் சேவைக்காலம்*

மற்றும் ஒவ்வொரு தனித்த விடயத்திற்கும் ஏற்புடையற்பாலதான வேறேதேனும் முக்கியமான விபரங்களையும் கருத்திற்கொண்டு ஓய்வூதியப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக் கப்படுதல் வேண்டும்.

(3) ஆணொருவராகவுள்ளவரும், பகிரங்க சேவையில் ஒரு தற்காலிக அல்லது அமயப் பதவியை வகிக்கின்றவருமான எவரேனுமாள் அவரது பதவியில் நிரந்தரமானவராக்கப்படு வதற்கு முன்னர் அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் தவறொன்றாகவமையும் செயலொன்று காரண மாக அல்லது ஏதேனும் இயற்கை அனர்த்தம் காரணமாகச் சேவையிலுள்ளபோதே இறக்கு மிடத்து, அத்தகைய ஆள், இக்கட்டளைச் சட்டத் தின் வேறெவையேனும் ஏற்பாடுகள் எவ்வாறிருப் பினும், அவரது இறப்புத் தேதியிலிருந்து இக் கட்டளைச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகின்ற அலுவலரொருவராகக் கருதப் படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆளின் விதவையும் பிள்ளைகளும், இக் கட்டளைச்சட்டத் தின் வேறெவையேனும் ஏற்பாடுகள் எவ்வாறிருப் பினும்,-

(அ) அத்தகைய ஆள் இறந்த நேரத்தில் அவர் பெற்றுக்கொண்டிருந்த சம்பளத்தின் அடிப் படையில், அவர் உயிரோடிருந்திருப்பின் எந்தத் தேதியன்று அவர் ஐம்பத்தைந்து வயதை அடைந்திருப்பாரோ அந்தத் தேதிவரை, இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணக்கிடப்பட்ட ஓய்வூதியமொன்றை அத்தகைய இறப்புத் தேதியிலிருந்து பெறுவதற்கும் ;

(ஆ) அவர் எந்தத் தேதியன்று ஐம்பத்தைந்து வயதை அடைந்திருப்பாரோ அந்தத் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், அவர் உயிரோடிருந்திருப்பின் ஐம்பத்தைந்து வயதை அடையும்வரை பெறுவதற்கு அவர் உரித்துடையவராகவிருந்திருக்கக்கூடிய சம்பள உயர்வுகள் எல்லாவற்றுடனுமான ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கும்,

உரித்துடையோராதலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடு எவ்வாளுக்கு ஏற்புடையதாகின்றதோ அவ்வாள் எவரும், அவர் பகிரங்க சேவையைச் சேர்ந்த தேதியிலிருந்து கட்டளைச்சட்டத்தின்கீழ் உதவு தொகைசெலுத்துநரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இக்கட்டளைச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இப்பிரிவின்கீழ் ஓய்வூதியம் வழங்கும் நோக்கத்துக்காக, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலர்களும், (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களும், அவர்களின் இறப்புத் தேதியன்றுள்ளவாறாக நிதியத்துக்கு வருமதியாக வுள்ள உதவுதொகைகளை முழுமையாகச் செலுத்தியுள்ளோராகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் நோக்கத்துக்காக -

"அவசரகால ஒழுங்குவிதிகள்" என்பது, (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி என்று பொருளாகும் ;

"இயற்கை அனர்த்தம்" என்பது, 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புகளின் 'எட' என்னும் அட்டவணையில் குறித்துரைக்கப் பட்ட அலுவலர் களின் விதவை களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு.*

27ஆ. இருபத்தேழாம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும்,-

(அ) ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புகளின் 'எட' என்னும் அட்டவணையில் குறித்துரைக்கப் பட்டவரும் ; அத்துடன்

(ஆ) ஜந்தாண்டுகாலச் சேவையைப் பூர்த்தி செய்வதன்மீது ஓய்வூதியமொன்றுக்கு உரித் துடையவரும்,

ஆன எவரேனும் அலுவலரின் விதவை, அத்தகைய அலுவலர் மரணமடைவதன்மீது, இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஓய்வுபெறு கையின்மேல் அத்தகைய அலுவலரினால் பெறப் பட்ட சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கு உரித்துடைய வராதல் வேண்டும். உதவுதொகைகளின் தொகை யானது, அத்தகைய அலுவலர் ஓய்வு பெறுவதன் மேல் அவரினால் பெறப்பட்ட சம்பளத்தின் அடிப் படையில் கணிப்பிடப்படுதல் வேண்டுமென் பதுடன், ஜந்தாண்டுகளைக்கொண்ட மொத்தக் காலப்பகுதிக்காக, வட்டியுடன் நிதியத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அத்த கைய உதவுதொகைகளானவை, அத்தகைய உதவு தொகைகளின்மீது திரண்ட வட்டியுடன் செலுத்தப் பட்டாலொழியவும் செலுத்தப்படும்வரையும், இப்பிரிவின்கீழ் ஓய்வூதியக் கொடுப்பனவு தொடங்குதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, "அல்லது திருமணமாகாத ஒரு பெண் அநாதையின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அல்லது ஒரு பெண் அநாதையின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :-

*"விதவை மீண்டும் திருமணஞ் செய்யும் விடயத்திலான ஏற்பாடு.*

34. (1) உதவுதொகை செலுத்துநரொருவரின் விதவை, அவள் மீண்டும் திருமணஞ்செய்வதன் மேல், அத்தகைய அடுத்துப்பின்னரான திருமணத் தேதிக்குப் பின்னர் –

(அ) அத்தகைய அடுத்துப்பின்னரான திருமண நேரத்தில் அவள் பெற்றுக்கொண்டிருந்த ஓய்வூதியத்தின் அரைவாசித் தொகையை ; அல்லது

(ஆ) அவள் ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராகவிருந்து ஆனால் அதனை உண்மையில் பெறாதிருந்த விடத்து, அத்தகைய அடுத்துப்பின்னரான திருமணத்துக்குமுன்னர் விதவையென்ற தன்மையில் அவள் பெற்றிருக்கவேண்டிய தொகையின் அரைவாசித் தொகையை,

ஓய்வூதியமாகப் பெறுதல் வேண்டும்.

(2) அவ்விதவையின் முதலாவது திருமணத்தினாலான பிள்ளைகள், மேலே (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின் நியதிகளின்படி விதவைக்கான கொடுப்பனவு செய்யப்பட்டபின்னர், அவ் விதவையினால் பெறப்பட்ட ஓய்வூதியத்தின் எஞ்சியுள்ள பாகத்தைப் பெறுதல் வேண்டும்.

(3) அத்தகைய அடுத்துப்பின்னரான திருமணத்தின் வாழ்க்கைத்துணையும் நிதியத்துக்கு உதவுதொகைசெலுத்துநராக இருக்குமிடத்தும், அத்தகைய வாழ்க்கைத்துணையினால் நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட உதவுதொகைகள் தொடர்பில் அத்தகைய வாழ்க்கைத்துணை இறப்பதன்மேல் அத்தகைய விதவை ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராகுமிடத்தும், (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளின் நியதிகளின்படி ஓய்வூதியமாக அவள் பெற்றுக்கொண்டிருந்த அத்தகைய தொகையின் கொடுப்பனவு, அத்தகைய அடுத்துப்பின்னரான திருமணத்தின் அத்தகைய வாழ்க்கைத்துணையின் இறப்புத் தேதியிலிருந்து முடிவுறுத்தப்படுதல் வேண்டும் :

ஆயின், மேலே ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக ஓய்வூதியக் கொடுப்பனவு முடிவுறுத்தப்படுமிடத்து, அவ்விதவையின் முதலாவது திருமணத்தினாலான பிள்ளைகள், அவர்களின் தாயினது அடுத்துப்பின்னரான திருமணத்தின் அவரது வாழ்க்கைத்துணையினது இறப்புத் தேதியிலிருந்து, (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அவர்கள் பெற்றுக்கொண்டிருந்த பங்கையும், அத்தகைய முடிவுறுத்தலுக்கு முன்னர் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அவர்களின் தாய் பெற்றுக்கொண்டிருந்த தொகையையும் பெறுவதற்கு உரித்துடையோராதல் வேண்டும் :

ஆயின், மேலும், அத்தகைய அடுத்துப்பின்னரான திருமணம் குலைந்துபோகும் பட்சத்தில், அவ்விதவை, (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அவள் பெற்ற அரைவாசிப் பங்கை ஓய்வூதியமாகப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன், (2) ஆம் உட்பிரிவின்கீழ் பிள்ளைகளின் உரித்துடைமை மாற்றமடையாது தொடர்ந்திருக்கும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும் ;

(2) அதன் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்த்துக் கொள்வதன்மூலமும் :-

"(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப் பினும், பதவிகள் ஒழிக்கப்பட்டமையின்மீது அவரது விருப்பத்தெரிவு அல்லது கட்டாய ஓய்வுபெறுகைத் தேதிக்குமுன்னர் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளவரும், நிதியத்துக்கு உதவுதொகைகளைச் செலுத்தாதொழிந்துள்ளவருமான பகிரங்க அலுவல ரொருவர், அத்தகைய ஓய்வுபெறுகைத் தேதிக்குப் பின்னர் அத்தகைய அலுவலரினால் செய்து கொள்ளப்பட்ட ஒரு திருமணம் தொடர்பில், அவர் ஓய்வுபெற்ற தேதியன்று தொடங்கி அவர் ஐம்பத்தைந்து வயதை அடையும்வரை நிதியத்துக்குத் தொடர்ந்தும் உதவுதொகைகளைச் செலுத்தலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 51அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படு கின்றது :-

*"இயைபான தேதியன்று அல்லது அதன் பின்னர் உதவு தொகை செலுத்து நர்களாக வந்து ஓய்வூதியமின்றிப் பகிரங்க சேவையை விட்டு நீங்கும் திருமணஞ்செய்த பகிரங்க அலு வலர்களுக்கு ஏற்புடையற் பாலனவான விசேட ஏற்பாடுகள்.*

51அ. (அ) இயைபான தேதியன்று அல்லது அதன்பின்னர் உதவுதொகை செலுத்துநரொருவராக வருகின்ற வரும் ; அத்துடன்

(ஆ) திருமணமாகாதொருவராக இராதிருக்கின்றவருமான,

எவரேனும் பகிரங்க அலுவலர் பகிரங்க சேவையை விட்டு நீங்குமிடத்து, ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்பு களின்கீழ் அவர் ஓய்வூதியமொன்றுக்குத் தகவு டையவராக இராதிருப்பின், அவரது உதவுதொகை களின் முழுமையினதும் அல்லது பாகத்தினதும் மீளளிப்பொன்று அவருக்கு வழங்கப்படலாகாது. எவ்வாறாயினும், சேவையைவிட்டு நீங்குமுன்னர்

அவர் பத்தாண்டுகால அல்லது அதற்கு மேற்பட்ட அத்தகைய சேவையைப் பூர்த்திசெய்திருப்பின், அவரது விதவை அல்லது அநாதைகள், அவர் இறப்பதன்மேல், இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணக்கிடப்பட்டவையும் அவரினாற் செலுத்தப்பட்டவையுமான உதவு தொகைகளின் அடிப்படைமீதான ஓய்வூதிய மொன்றுக்கு உரித்துடையோராதல் வேண்டும்.”.

*இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் இறந்துள்ள ஆட்களுக்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாதல்.*

**9**. (1) மேற்கூறப்பட்ட உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளின்கீழ், நிதியத்துக்கு உதவுதொகை செலுத்து நரொருவராகவிருந்து இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முன்னர் இறந்துள்ள எவரேனும் பகிரங்க அலுவலரின் விதவைக்கும் பிள்ளைகளுக்கும் 27அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஆணொருவராகவுள்ளவரும், மேற்கூறப்பட்ட உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளின்கீழ் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்குமுன்னர் பகிரங்க சேவையில் தற்காலிக அல்லது அமயப் பதவியொன்றை வகித்துள்ளரும், சேவையிலிருக்கும்போதே இறந்துள்ளவருமான எவரேனும் ஆளின் விதவைக்கும் பிள்ளைகளுக்கும் 27அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எந்த ஆளுக்கு ஏற்புடையனவாகவுள்ளனவோ அந்த எவரேனும் ஆள், முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் உதவுதொகை செலுத்து நரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் ஓய்வூதிய மொன்றை வழங்கும் நோக்கத்துக்காக, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலர்களும் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களும், அத்தகைய ஒவ்வோர் ஆளினதும் இறப்புத் தேதியன்றுள்ளவாறாக, அவர்களிடமிருந்து நிதியத்துக்கு வருமதியாகவிருந்த எல்லா உதவு தொகைகளையும் அவர்கள் முழுமையாகச் செலுத்தியுள்ளன ரெனக் கருதப்படுதல் வேண்டும்.

பணிப்பாளர் தலைமையதிபதிக்கு உரிமைக் கோரிக்கைகள் அனுப்பி வைக்கப்படுதல்.

**10.** இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் அலுவலரின் அல்லது ஆளின் எவரேனும் விதவை அல்லது எவரேனும் பிள்ளை அல்லது பிள்ளைகள், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டிய தேதியன்று அல்லது அதன் முன்னர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் தமது உரிமைக் கோரிக்கைகளைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

**11.** இச்சட்டத்தின் 6 ஆம், 7 ஆம் மற்றும் 8 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், முதன்மைச் சட்டவாக்கம் எத்தேதியில் நடைமுறைக்கு வந்ததோ அத்தேதியிலிருந்து பயனுறுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**12.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்